பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 09 2025 6.30

புதன்கிழமை மாலை

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வேளாண் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

- வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் செளகான் தெரிவித்துள்ளார்.

- நீர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதில் திமுக அரசு தோல்வி அடைந்துள்ளதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

- கோவை, நீலகிரி, தேனி உட்பட 7 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 4-2 என்ற கோல்கணக்கில் கொரியாவை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வேளாண் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

வேளாண் இயந்திரங்களுக்கான வரி குறைக்கப்பட்டு இருப்பதன் மூலம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று வேளாண் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

குறைந்த செலவில் கூடுதல் மகசூலை பெறுவதற்கு இந்த வரிக்குறைப்பு உதவிகரமாக இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த இலக்கினை எட்ட உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மகளிர் சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கி வருவதாகவும் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.

>><><><<

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு அருகே அமைக்கப்பட்ட கண்ணாடி பாலத்தின் பாரமரிப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த மாதம் 16 ஆம் தேதி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது, சேதமடைந்த பகுதிகள் சீரமைக்கப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

தற்போது இந்த கண்ணாடி பாலத்தை பொதுமக்கள் பார்வையிட்டு வருவதாகவும் திரு எ வ வேலு தெரிவித்தார்.

>><><><<

தமிழகத்தில் நீர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதில் திமுக அரசு தோல்வி அடைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நெல்லையின் வற்றாத ஜீவநதியாகவும், ஐந்து மாவட்ட மக்களின் குடிநீர் தேவையின் உயிர்நாடியாகவும் உள்ள தாமிரபரணி ஆறு திமுக அரசின் அலட்சியத்தால் முற்றிலுமாக சீரழிந்துள்ளதாக குறைகூறியுள்ளார்.

ஒருவேளை தண்ணீருக்காக தென்மாவட்ட மக்களை சிரமப்படுத்த வேண்டும் என்பதுதான் திமுக அரசின் நோக்கமா என்றும் அவர் வினவியுள்ளார்.

நீர்மேலாண்மையின் அடிப்படை தேவையை நிறைவேற்ற முடியாத திமுக அரசு, நீர் வளத்துறை என்ற தனித்துறையை உருவாக்கியது ஏன் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

>><><><><<

கடலூர் சிப்காட் வளாகத்தில் நச்சுப்புகை வெளியேறியது தொடர்பாக, தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நச்சு வாயு வெளியேற்றத்தின் காரணமாக 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் மருத்துவர் ச ராமதாசு கோரியுள்ளார்.

>><><><><<

கோவை, நீலகிரி, தேனி உட்பட 7 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இய்ககுநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக் கண்ணன் - 54 செகண்ட்ஸ்)

>><><><><<

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் மழை வெள்ள பாதிப்பை எதிர்கொள்வதற்கான பேரிடர் கால ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

சுமார் 2 மணிநேரம் இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றதாக ஆட்சியர் திரு இளம் பகவத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – இளம் பகவத்– 41 செகண்ட்ஸ்)

>><><><><<

நாகை மாவட்டம் அக்கறைப்பேட்டை மீனவ கிராமத்தில் 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான சமுத்திர ராஜ பூஜை இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – செ ஜெபராஜ் – 45 செகண்ட்ஸ்)

>><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் சர்வதேச இளைஞர் தின மாரத்தான் ஓட்டத்தை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கி வைத்தார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சிறப்பு கல்விக்கடன் முகாமில் ஆட்சியர் திருமதி அழகுமீனா பங்கேற்று மாணவர்களிடையே உரையாற்றினார்.

-------------------

திண்டுக்கல் மாவட்டம் கோபால்பட்டி அருகே ஏற்பட்ட சாலைவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

---------------

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் பத்து நாட்களுக்கு பிறகு சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

-----------------

வேலூரில் நடைபெற்ற எயிட்ஸ் விழிப்புணர்வு மாரத்தானில் 800 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

---------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

--------------------

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 4-2 என்ற கோல்கணக்கில் கொரியாவை வென்றது.

சீனாவின் Gongshu-வில் நடைபெற்ற இப்போட்டியில் Vaishnavi, Sangeetha Kumari, Lalremsiami மற்றும் Rutuja Dadaso தலா ஒரு கோல் அடித்தனர்.

----------------

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் Lu Guang Zu -ஐ வென்றார்.

லக்ஷயா சென் மற்றும் கிரண் ஜார்ஜும் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

உலக சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Swati Sharma காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 21-13, 21-12 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Nanthanat Thienrajkij -ஐ வென்றார்.

------------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ashmita Chaliha, Tanvi Sharma, Shriyanshi Valishetty ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

இங்கிலாந்தின் லிவர் பூலில் நடைபெற்று வரும் உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

--------------

தேசிய ஜூனியர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தமிழகம் தங்கப்பதக்கம் வென்றது.

>> End of News <<